## சுருக்கம்

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை – நபார்டு – 65 பாலப்பணிகளை செயல்படுத்த நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி–XVII ன் கீழ் ரூ. 151.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு1) துறை**

அரசாணை (நிலை) எண். 108

நாள் 06.09.2011.
திருவள்ளுவர் ஆண்டு 2042,
ஆவணி 20–ம் நாள்.

படிக்க:-

1. தலைமைப் பொறியாளர் (ந (ம) கி.சா) கடித எண். 5527 / 2009 / உ.பொ.7, நாள் 28–05–2010.
2. தலைமைப் பொறியாளர் (ந (ம) கி.சா) கடித எண். 5527/2010/உ.பொ.7 நாள் 16–06–2011.
3. துணை பொது மேலாளர், நபார்டு வங்கி கடித எண் த.நா.எஸ்ப்பிடி / 78 / ஆர்.ஐ.டி.எப். XVII (தமிழ்நாடு) /117ப்பிஎஸ்சி/2011–12 நாள் 15–07–2011.
4. தலைமைப் பொறியாளர் (ந (ம) கி.சா) கடித எண். 5527/2010/உ.பொ.7 நாள் 21–07–2011.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (நெ) (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அவர்களின் கடிதத்தில் நபார்டு வங்கியின் கடனுதவி பெற்று 123 பாலப் பணிகளை செயல்படுத்த ரூ.319.20 கோடி மதிப்பீட்டில் செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. இச்செயற்குறிப்பானது நபார்டு வங்கிக்கு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XVI-ன் கீழ் கடன் பெற பரிந்துரை செய்யப்பட்டது. பின்னர், தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 53–வது உயர்மட்டக் குழுவில் (High Power Committee) விவாதிக்கப்பட்டு, ரூ.151.00 கோடிக்கு திருத்திய கருத்துரு நபார்டு வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதை பரிசீலித்த நபார்டு வங்கி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 15.07.2011–ல் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XVII-ல் 65 பாலப் பணிகளை செயல்படுத்த ரூ. 151 கோடிக்கு இசைவளித்துள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நபார்டு வங்கி, கடன் வழங்க அளித்த ஒப்புதலின் அடிப்படையில், ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி XVII ன் (RIDF- XVII) கீழ் 65 பாலப் பணிகளை செயல்படுத்த ரூ.151.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு தலைமைப் பொறியாளர் (நெ) (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அவர்கள் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள கருத்துருவில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நபார்டு வங்கியின் ஒப்புதல் மற்றும் தலைமைப் பொறியாளர் (நெ) (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி XVII-ன் (RIDF- XVII) கீழ் இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள 65 பாலப் பணிகளை செயல்படுத்த ரூ. 151.00 கோடிக்கு (ரூபாய் நூற்று ஐம்பத்தோரு கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது. இதில் ரூ. 120.80 கோடி (ரூபாய் நூற்று இருபது கோடியே எண்பது இலட்சம் மட்டும்) நபார்டு வங்கியின் கடனாகவும் (80% தொகை) மீதமுள்ள தொகையான ரூ. 30.20 கோடி (ரூபாய் முப்பது கோடியே இருபது இலட்சம் மட்டும்) (20% தொகை) தமிழக அரசின் பங்காகவும் இருக்கும்.

4. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"5054–சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு–04 மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும் 337–சாலைப்பணிகள் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II–மாநிலத் திட்டம் –JZ – நபார்டு நிதியுதவியுடன் பாலங்களைக் கட்டுதல் / சீரமைத்தல் – 16 பெரும்பணிகள்".
(த.தொ.கு. 5054-04–337-JZ-1607)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணி" (NEW SERVICE) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதித் (வரவு செலவு–பொது.1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதித் (வரவு செலவு – பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, 2011 – 2012 துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித் (வரவு செலவு – பொது.1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. தலைமைப் பொறியாளர் (நெ) (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அவர்கள், மேலே பத்தி 3–ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளை விரைவாக செயல்படுத்தி நபார்டு வங்கியின் கடன் மற்றும் அரசின் பங்கை முழுமையாக பயன்படுத்தி நபார்டு வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட கால வரையறைக்குள் இப்பணிகளை முடித்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார். மேலும் செயல்படுத்தப்படும் பணிகளை உரிய வரைமுறைகளின்படி தரமாகவும், உறுதியாகவும் செயல்படுத்துமாறு களப்பணி

அலுவலர்களான கோட்டப் பொறியாளர்கள்/கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தி பணிகள் முறையாக உரிய காலத்திற்குள் நடைபெறுவதை கண்காணிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ. சா. கு. எண். 194 / DS (NK) / பொ.ப.1 / 2011, நாள் 06.09.2011 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 480 (நானூற்று எண்பது)—ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி. ராமசந்திரன்
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) சென்னை—32
துணை பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை—34

<u>நகல்</u>

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில கணக்காயர், சென்னை—18 / 35 / 6
நிதித் (பொ.ப.1 / வ.செ – பொது I மற்றும் II / ஆதாரம்.II) துறை, சென்னை—9
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
அனைத்து பிரிவுகள், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை—9.
செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை—9.
தேசிய தகவல் மையம் (NIC), சென்னை—9.
இ.கோ / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>பிற்சேர்க்கை</u>

**அரசாணை (நிலை) எண். 108, நெடுஞ்சாலை(ம)சிறு துறைமுகங்கள் (எச்டபிள்யு.1) துறை, நாள் 06.09.2011–ன் இணைப்பு (65 பாலங்கள் கட்டுதல் பணிப்பட்டியல்)**

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | வேலையின் பெயர் | மதிப்பு ரூ. இலட்சத்தில் | நபார்டு கடனுதவி (80 சதவீதம்) ரூ. இலட்சத்தில் | அரசின் பங்களிப்பு (20 சதவீதம்) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் | நாசரேத் – ஏரல் சாலை கி.மீ. 15/4–15/8 இல் பாலம் கட்டுதல் | 1490.00 | 1192.00 | 298.00 |
| 2 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | கோபாலபுரம் – கூமாப்பட்டி சாலை கி.மீ 1/8 இல் பாலம் கட்டுதல் | 75.00 | 60.00 | 15.00 |
| 3 | விருதுநகர் | அருப்புக்கோட்டை | அருப்புக்கோட்டை – குறுந்தமடம் சாலை கி.மீ 3/8 இல் பாலம் கட்டுதல் | 75.00 | 60.00 | 15.00 |
| 4 | விருதுநகர் | திருச்சுழி | திருச்சுழி – கமுதி சாலையிலிருந்து இலுப்பையூர் செல்லும் சாலை கி.மீ 1/6 இல் உயர் மட்டப் பாலம் கட்டுதல் | 400.00 | 320.00 | 80.00 |
| 5 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஸ்ரீவில்லிபுத்தூர் – சிவகாசி – விருதுநகர் – அருப்புக்கோட்டை – திருச்சுழி – காரைக்குடி – பார்த்திபனூர் சாலை கி.மீ 94/4 இல் பாலம் கட்டுதல் | 450.00 | 360.00 | 90.00 |
| 6 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | கிருஷ்ணன்கோவில் – கூமாப்பட்டி கி.மீ 7/8 இல் பாலம் கட்டுதல் | 50.00 | 40.00 | 10.00 |
| 7 | விருதுநகர் | சாத்தூர் | மாரநேரி – நதிக்குடி சாலை கி.மீ 4/8 இல் குழாய்ச் சிறுபாலம் கட்டுதல் | 11.50 | 9.20 | 2.30 |
| 8 | விருதுநகர் | சிவகாசி | நல்லுத்தேவன்பட்டி – கள்ளிப்பட்டி சாலை கி.மீ 0/2 இல் பாலம் கட்டுதல் | 75.00 | 60.00 | 15.00 |
| 9 | விருதுநகர் | அருப்புக்கோட்டை | மீனாட்சிபுரம் – ஏ.முக்குளம் சாலை கி.மீ 8/2இல் பாலம் கட்டுதல் | 60.00 | 48.00 | 12.00 |
| 10 | சிவகங்கை | மானாமதுரை | மானாமதுரை – பரமக்குடி (வழி) தெ. புதுக்கோட்டை சாலை கி.மீ. 12/8 இல் சிறுபாலம் கட்டுதல் | 27.00 | 21.60 | 5.40 |
| 11 | சிவகங்கை | மானாமதுரை | தே.நெ.49 – சாலையில், கி.மீ.43/2 இல் பிரிந்து காட்டானூர் செல்லும் சாலையில் கி.மீ.12/8 இல் பாலம் கட்டுதல் | 28.00 | 22.40 | 5.60 |
| 12 | சிவகங்கை | மானாமதுரை | பெரம்பலூர் – மானாமதுரை – வேலூர் சாலை கி.மீ.3/6 இல் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் | 28.00 | 22.40 | 5.60 |
| 13 | சிவகங்கை | மானாமதுரை | கமுகர்கடை சாலை கி.மீ.0/10 இல் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் | 94.00 | 75.20 | 18.80 |
| 14 | சிவகங்கை | மானாமதுரை | பிரம்மனூர் சாலை கி.மீ.0/8 இல் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் | 78.00 | 62.40 | 15.60 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | வேலையின் பெயர் | மதிப்பு ரூ. இலட்சத்தில் | நபார்டு கடனுதவி (80 சதவீதம்) ரூ. இலட்சத்தில் | அரசின் பங்களிப்பு (20 சதவீதம்) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 15 | சிவகங்கை | மானாமதுரை | சிலைமான் – போட்டப்பாளையம் சாலை கி.மீ.0/4 இல் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் | 91.00 | 72.80 | 18.20 |
| 16 | சிவகங்கை | காரைக்குடி | பஞ்சமாரி – திருப்பக்கோட்டை சாலை கி.மீ. 1/4 இல் பாலம் கட்டுதல் | 37.50 | 30.00 | 7.50 |
| 17 | சிவகங்கை | காரைக்குடி | ஒ. சிறுவயல் – குன்றக்குடி சாலை கி.மீ. 1/2 இல் சிறுபாலம் கட்டுதல் | 23.00 | 18.40 | 4.60 |
| 18 | சிவகங்கை | காரைக்குடி | ஒ. சிறுவயல் – குன்றக்குடி சாலை கி.மீ. 1/6இல் பாலம் கட்டுதல் | 31.00 | 24.80 | 6.20 |
| 19 | சிவகங்கை | காரைக்குடி | சூரக்குடி – பள்ளத்தூர் சாலை கி.மீ. 3/2 இல் பாலம் கட்டுதல் | 30.00 | 24.00 | 6.00 |
| 20 | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | மண்டலமாணிக்கம் – வீரசோழம் சாலை கி.மீ. 1/4 இல் பாலம் கட்டுதல் | 250.00 | 200.00 | 50.00 |
| 21 | இராமநாதபுரம் | பரமக்குடி | காக்கனேந்தல் – கருத்தனேந்தல் சாலை கி.மீ. 0/2 இல் பாலம் கட்டுதல் | 92.00 | 73.60 | 18.40 |
| 22 | இராமநாதபுரம் | பரமக்குடி | காக்கனேந்தல் – கருத்தனேந்தல் சாலை கி.மீ. 1/10 இல் பாலம் கட்டுதல் | 92.00 | 73.60 | 18.40 |
| 23 | இராமநாதபுரம் | திருவாடனை | அஞ்சுக்கோட்டை– நீர்க்குன்றம் சாலை கி.மீ. 10/8 இல் பாலம் கட்டுதல் | 32.00 | 25.60 | 6.40 |
| 24 | திருச்சி | மணச்சநல்லூர் | சிறுகாம்பூர் – கரட்டாம்பட்டி சாலை கி.மீ. 15/10 இல் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 100.18 | 80.14 | 20.04 |
| 25 | திருச்சி | மணச்சநல்லூர் | எம்.பி கோவில் – அழகியமணவாளம் – தீராம்பாளையம் சாலை கி.மீ. 3/6 இல் பெருவளை வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல். | 120.22 | 96.18 | 24.04 |
| 26 | திருச்சி | மணச்சநல்லூர் | சமயபுரம் – பாளையூர் சாலை (வழி) 94 கரியமாணிக்கம் கி.மீ.4/4 இல் உப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 300.50 | 240.40 | 60.10 |
| 27 | திருச்சி | லால்குடி | புள்ளம்பாடி – கருடமங்கலம் சாலை கி.மீ. 10/8 இல் அலந்தலைப்பூர் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 108.00 | 86.40 | 21.60 |
| 28 | திருச்சி | லால்குடி | மாங்குடி – நத்தம் சாலை கி.மீ. 2/2 இல் வடிகால் வாய்காலின் குறுக்கே பாலம் கட்டுதல் | 108.00 | 86.40 | 21.60 |
| 29 | பெரம்பலூர் | குன்னம் | குன்னம் – வேப்பூர் – வயலப்பாடி சாலை கிமீ 12/4 இல் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல். | 90.00 | 72.00 | 18.00 |
| 30 | அரியலூர் | குன்னம் | மாத்தூர் – கோட்டைக்காடு– அயன்தத்தனூர் சாலையில் கி.மீ. 2/8 இல் ஆணைவாரி ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 246.00 | 196.80 | 49.20 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | வேலையின் பெயர் | மதிப்பு ரூ. இலட்சத்தில் | நபார்டு கடனுதவி (80 சதவீதம்) ரூ. இலட்சத்தில் | அரசின் பங்களிப்பு (20 சதவீதம்) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 31 | புதுக்கோட்டை | அறந்தாங்கி | ஆவுடையார் கோயில் – கோட்டைபட்டினம் சாலை முதல் அம்பலவான நேந்தல் வழி மூவனூர் மஞ்சக்குடி சாலையில் கி.மீ.2/2 ல் சத்தியை நீர்தேக்கம் குறுக்கே பாலம் கட்டுதல் | 80.00 | 64.00 | 16.00 |
| 32 | புதுக்கோட்டை | திருமயம் | புதுக்கோட்டை – ஏம்பல் சாலை கி.மீ. 28/6 இல் பாம்பாறு ஆற்றின் குறுக்கே உயர் மட்டபாலம் கட்டுதல் | 200.00 | 160.00 | 40.00 |
| 33 | தஞ்சாவூர் | ஒரத்தநாடு | வெட்டிக்காடு – தளிகைவிடுதி சாலை கிமீ. 6/2 இல் மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 226.00 | 180.80 | 45.20 |
| 34 | தஞ்சாவூர் | ஒரத்தநாடு | அக்கரைவட்டம் – தட்சிணாமூர்த்திபுரம் சாலை கி.மீ. 5/6 இல் கல்லணை கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் | 133.50 | 106.80 | 26.70 |
| 35 | தஞ்சாவூர் | திருவையாறு | திருகாட்டுப் பள்ளி – செங்கிப்பட்டி – பட்டுக்கோட்டை சாலை கிமீ.0/2–4 இல் காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 2000.00 | 1600.00 | 400.00 |
| 36 | நாகப்பட்டினம் | பூம்புகார் | அரிவேலூர் – வேலூர் சாலை கி.மீ. 0/6 இல் மகிமலையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 78.50 | 62.80 | 15.70 |
| 37 | நாகப்பட்டினம் | பூம்புகார் | கோனேரிராஜபுரம் கிராம சாலை கி.மீ. 3/4ல் கீர்த்திமானாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 76.00 | 60.80 | 15.20 |
| 38 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | வெரியப்பூர் – மார்க்கம்பட்டி சாலை கி. மீ 5/8இல் பாலம் கட்டுதல் | 213.00 | 170.40 | 42.60 |
| 39 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | வெரியப்பூர் – மார்க்கம்பட்டி சாலை கி. மீ 10/10 இல் பாலம் கட்டுதல் | 100.00 | 80.00 | 20.00 |
| 40 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | வெரியப்பூர் – மார்க்கம்பட்டி சாலை கி. மீ 11/2 இல் பாலம் கட்டுதல் | 150.00 | 120.00 | 30.00 |
| 41 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | வெரியப்பூர் – மார்க்கம்பட்டி சாலை கி. மீ 19/6 இல் பாலம் கட்டுதல் | 85.00 | 68.00 | 17.00 |
| 42 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | கூத்தம்பூண்டி – மூலனூர் சாலையிலிருந்து கழுத்தறிக்கான் பாளையம் செல்லும் சாலை கி.மீ 0/8 இல் பாலம் கட்டுதல் | 75.80 | 60.64 | 15.16 |
| 43 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | மஞ்சநாயக்கன்பட்டி – கள்ளிமந்தையம் சாலை கி.மீ 8/2–ல் பாலம் கட்டுதல் | 74.80 | 59.84 | 14.96 |
| 44 | நாமக்கல் | பரமத்தி–வேலூர் | வேலூர் – மோகனூர் சாலையில் கி.மீ. 2/8 இல் திருமணி முத்தாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 130.00 | 104.00 | 26.00 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | வேலையின் பெயர் | மதிப்பு ரூ. இலட்சத்தில் | நபார்டு கடனுதவி (80 சதவீதம்) ரூ. இலட்சத்தில் | அரசின் பங்களிப்பு (20 சதவீதம்) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 45 | நாமக்கல் | குமாரப்பாளையம் | மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலையில் கி.மீ. 94/2–94/660 இல் பள்ளிப்பாளையம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 1466.00 | 1172.80 | 293.20 |
| 46 | கிருஷ்ணகிரி | ஓசூர் | அத்திமுகம் – பேரண்டஹள்ளி – தொரப்பள்ளி – கெலமங்களம் சாலை கி.மீ. 14/4–இல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 395.00 | 316.00 | 79.00 |
| 47 | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | கம்பைநல்லூர் – ஆனந்தூர் சாலை கி.மீ. 5/8 இல் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 600.00 | 480.00 | 120.00 |
| 48 | ஈரோடு | மொடக்குறிச்சி | பாசூர் ஆர்.எஸ் – வெள்ளோடு சாலை கி.மீ 9/8 இல் குரங்கன் பள்ளம் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 133.00 | 106.40 | 26.60 |
| 49 | ஈரோடு | மொடக்குறிச்சி | கொளாநல்லி ஆர்.எஸ் வள்ளிபுரம் சாலை கி.மீ.3/8 இல் குரங்கன் பள்ளம் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல். | 112.00 | 89.60 | 22.40 |
| 50 | ஈரோடு | மொடக்குறிச்சி | முத்தூர் – காமராஜர் நகரிலிருந்து கல்லேரி வழியாக செங்கோடம்பாளையம் பால் சங்கம் வரை செல்லும் சாலை கி.மீ. 2/4 இல் பிரிந்து கந்தசாமிப்பாளையம் செல்லும் சாலையில் கி.மீ. 0/2 இல் நொய்யல் ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல். | 217.00 | 173.60 | 43.40 |
| 51 | ஈரோடு | பவானிசாகர் | திம்பம் – தளமலை – தாளவாடி சாலையில் கி.மீ. 35/6 இல் (சிக்கள்ளி) ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 162.50 | 130.00 | 32.50 |
| 52 | ஈரோடு | பவானிசாகர் | திம்பம் – தளமலை – தாளவாடி சாலையில் கி.மீ. 37/6 இல் (ஆஸ்மித்து) ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 110.00 | 88.00 | 22.00 |
| 53 | ஈரோடு | பவானி | ஊட்டி –கோத்தகிரி – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு சாலை கி.மீ. 138/8 இல் இணையும் பெருந்தலையூர் சாலை கி.மீ. 6/4 இல் தடப்பள்ளி வாய்க்கால் மற்றும் ஓடத்துறை ஏரியின் கசிவு நீர் கால்வாய் இணையும் பகுதியில் பாலம் கட்டுதல் | 100.00 | 80.00 | 20.00 |
| 54 | ஈரோடு | பவானி | பெருந்தலையூர் – காளிங்கராயன்பாளையம் சாலை கி.மீ. 3/10 இல் குட்டிபாளையம் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 150.00 | 120.00 | 30.00 |

| வ. எண் | மாவட்டம் | தொகுதி | வேலையின் பெயர் | மதிப்பு ரூ. இலட்சத்தில் | நபார்டு கடனுதவி (80 சதவீதம்) ரூ. இலட்சத்தில் | அரசின் பங்களிப்பு (20 சதவீதம்) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 55 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | மணப்பாறை – குஜிலியம்பாறை சாலையில் கி.மீ. 26/2 இல் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 69.00 | 55.20 | 13.80 |
| 56 | கரூர் | குளித்தலை | கொமட்டேரி – பஞ்சப்பட்டி சாலையில் கி.மீ. 0/2 இல் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 157.00 | 125.60 | 31.40 |
| 57 | கரூர் | குளித்தலை | குறிச்சி–நங்கவரம் சாலையில் கி.மீ 1/6 இல் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் | 138.00 | 110.40 | 27.60 |
| 58 | விழுப்புரம் | செஞ்சி | வளத்தி–அவலூர்பேட்டை சாலை கிமீ 7/2இல் பாலம் கட்டுதல் | 210.00 | 168.00 | 42.00 |
| 59 | கடலூர் | நெய்வேலி | காடாம்புலியூர் - கீழகுப்பம் சாலை (வழி) காட்டுப் பாளையம் மேல்மேட்டு குப்பம் கி.மீ 10./4 இல் பாலம் கட்டுதல் | 37.50 | 30.00 | 7.50 |
| 60 | கடலூர் | நெய்வேலி | காடாம்புலியூர் - கீழகுப்பம் சாலை (வழி) காட்டுப் பாளையம் மேல்மேட்டு குப்பம் கி.மீ 11/6 இல் பாலம் கட்டுதல் | 37.50 | 30.00 | 7.50 |
| 61 | கடலூர் | குறிஞ்சிப்பாடி | கடலூர் – திருக்கோவிலூர் – சங்கராபுரம் சாலை கி.மீ 8/6 இல் பிரிந்து செல்லும் சாத்தங்குப்பம் சாலை (வழி) திருமாணிக்குழி கி.மீ 0/4 – 0/6 இல் கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 920.00 | 736.00 | 184.00 |
| 62 | விழுப்புரம் | வானூர் | பிரம்மதேசம் – இரங்கநாதபுரம் சாலை (வழி) கிளியனூர் கி.மீ. 8/8 இல் நரசிம்ம ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டுதல் | 375.00 | 300.00 | 75.00 |
| 63 | விழுப்புரம் | விழுப்புரம் | தளவானூர் – பைத்தாம்பாடி சாலை இடையே கிமீ 3/2 – 3/8ல் தென்பெண்ணை யாற்றின் குறுக்கே குழாய் தாம்போகி கட்டுதல் | 450.00 | 360.00 | 90.00 |
| 64 | விழுப்புரம் | மயிலம் | கொங்கரம்பட்டு – மரூர் சாலை (வழி) மேல்சேவூர் கி.மீ 1/0 இல் சங்காராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 625.00 | 500.00 | 125.00 |
| 65 | திருவண்ணாமலை | செங்கம் | பென்னாா் – போந்தை சாலை கி.மீ. 4/0 இல் பாலம் கட்டுதல் | 320.00 | 256.00 | 64.00 |
| **மொத்தம்** | | | | **15100.00** | **12080.00** | **3020.00** |

தா.கி. ராமசந்திரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.